DR. H. V. HANDE : The Hon. Minister in his reply said that 12 complaints and 19 suggestions had been received. Suggestions may also contain some complaints with some remedial measures. Out of the 12 complaints what are the major complaints? The most important complaint is that the bus does not reach, in time, several places. What are the details of the complaints? May I also know the remedial measures taken by Government?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த 12 கம்ப்ளெயின்டில் ஒன்று தான் பிரேக் டவுன் பற்றியது, இன்னொன்று ஆக்ஸிடென்ட்டைப்பற்றி வந்திருக்கிறது. பாடியிலே சத்தம் இருப்பதாக இரண்டும் ஆக மொத்தம் 4 கம்ப்ளெயின்ட்கள் இருக்கின்றன. மற்றவையெல்லாம் சீட்டுகளில் இடம் சரிவர இல்லாமல் இருப்பதுபற்றியும், கால் வைக்க இடமில்லை என்பது பற்றியும், போகும்பொழுது புகைபிடிப்பதற்கு வசதி செய்யவேண்டுமென்றும் வந்திருக்கிறது.

திரு. நா. கணபதி : இந்தப் புகார் புத்தகத்தைப்பற்றிக் கேள்வி கேட்ட டாக்டர் ஹாண்டே அவர்களுடைய புகார் ஏதாவது புகார் புத்தகத்தில் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

DR. H. V. HANDE : Even now I have got a complaint letter right before me.

MR. DEPUTY SPEAKER : It is unparliamentary. தனிப்பட்ட உறுப்பினரைப்பற்றி நீங்கள் கேட்கக் கூடாது.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உறுப்பினர்கள் பதில்சொல்ல முடியாத நிலையிலே இருக்கும்பொழுது உறுப்பினரைக் கேள்வி கேட்பது சரியல்ல.

சென்னை—நாகப்பட்டினம் பேருந்துப்பணி

*519 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை—நாகப்பட்டினம் பாதையில் இரவு நேரங்களில் பஸ் விடும் திட்டம் ஏதேனும் தற்போது அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆம். சென்னை—நாகப்பட்டினம் வழித்தடம் 538 இல் சென்னையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் இரவு நேர பேருந்துகள் இரவு ஒன்பதே கால் மணிக்குப் புப்படும். சென்னை—தஞ்சை 558 வழித் தடத்தில் சென்னையிலிருந்தும், தஞ்சையிலிருந்தும் இரவு ஒன்பதேமுக்கால் மணிக்குப் புறப்படும். சென்னையிலிருந்து புறப்படும் வண்டி 7—8—1971-லிருந்தும் நாகை, தஞ்சையிலிருந்து புறப்படும் வண்டி 8—8—1971 இரவு முதலிருந்தும் அமல்படுத்தப் படும். அந்த வண்டிகள் முறையே குறிப்பிட்ட இடங்களுக்கு ஐந்தேமுக்கால் மணிக்கும் 6 மணிக்கும் வந்து சேரும்.

1971 ஜூலை 28]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, நாகையிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து நாகைக்கும் பாண்டியன் என்ற பெயராலே ஆம்னி பஸ்கள் ரெகுலர் சர்வீஸ் போன்று ஓடிக்கொண்டிருக்கின்றன. அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆம்னி பஸ்களைத் தடுப்பதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது. ஆனால் இப்பொழுது இரவு நேரப் பேருந்துகளை அரசாங்கப் போக்குவரத்துத் துறையின் மூலமாக நாகப்பட்டினத்திற்கும் தஞ்சாவூருக்கும் விட ஆகஸ்டு மாதத்தில் உத்தேசித்து இருக்கிறோம்.

*520 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையிலிருந்து நாகப்பட்டினத்திற்குச் செல்லும் அரசுப் பேருந்துகளின் ஓடும் நேரத்தைக் குறைக்க ஏதேனும் திட்டம் அரசு பரிசிலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து நாகைக்குப் புறப்படுகின்றவர்களுக்கும் நாகையிலிருந்து சென்னைக்கு நீண்ட தூரப் பயணம் செய்து வரக்கூடியவர்களுக்கும் முதலிடம் தந்து இத்தகைய முறையிலே புறப்படக்கூடிய இடத்திலிருந்து சேரக்கூடிய இடம்வரையில் இடையிலுள்ள ஸ்டாப்புகளில் நிற்காமல் சென்னைக்கும் நாகைக்கும் இடையே பஸ்கள் விட அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 28-லிருந்து 35 வரை ஒரு மணிக்குச் செல்லலாம் கடுந்தொலைவு பேருந்துகள் என்று விதி முறை இருக்கிறது. அதிகமாக வேகம் சென்றால் ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுமோ என்ற நிலைமை இருக்கிறது. காலதாமதத்தைத் தவிர்க்கின்ற முறையிலே ஆங்காங்கு அனாவசியமாக நிற்கின்ற இடங்களைப் பற்றி மறுபரிசீலனை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாயூரத்தில் அரசு பேருந்து பணிமனை

*521 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாயூரத்தில் அரசு பேருந்து நிலைய பணிமனை ஒன்று அமைத்திடும் திட்டம் ஏதேனும் தற்போது பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்போது இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரத்திலே நிறுத்தப்படும் அரசாங்க பஸ்களுக்கு ரிப்பேர், கழுவுதல் போன்றவற்றைச் செய்வதற்காக தனியாரிடத்திலே செல்லவேண்டிய சூழ்நிலையில் அவற்றை அரசே செய்து கொள்ளக்கூடிய முறையிலே அரசே அத்தகைய சாலைகளை அமைக்கத் திட்டமிடுமா ?